ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தொலைபேசி : 044– 25670769
நிகரி : 25675849
இணையதளம் : www.tnrd.gov.in

**கடிதம் (நிலை) எண். 126, நாள் 10.11.2009**

அனுப்புநர்
திரு க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை - 15 வழியாக)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக),
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
பேரூராட்சிகள் ஆணையரகம், சென்னை – 108.
உறுப்பினர் - செயலாளர், மாநில திட்டக் குழு, சென்னை - 5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 108.
அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகம், சென்னை – 9.
நிர்வாக இயக்குநர், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்,
சென்னை–

அய்யா / அம்மையீர்,

பொருள் : திட்டங்கள் - சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் - 2009-10 - இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் வரையறுக்கப்பட்ட கட்டாய பணிகளின் பட்டியலில் ஜெட்ராடிங் இயந்திரங்கள், ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்கள் வாங்குதல் சேர்த்து - ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.7.2009.
2. அரசாணை (நிலை) எண்.90, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.8.2009.
3. கடிதம் (நிலை) எண்.99, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 07.09.2009.
4. கடிதம் (டி) எண்.581, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 06.10.2009.
5. நிர்வாக இயக்குநர், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் அவர்களின் நேர்முகக் கடிதம் எண்.CMWSSB/Sew.Cleaning/2009, நாள் 09.11.2009.

\- - - - -

பார்வை 4-ல் உள்ள அரசுக் கடிதத்தில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் உள்ள சென்னை பெருநகரம் மற்றும் தமிழ்நாட்டில் எந்தெந்த மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தற்போது பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பாட்டில் உள்ளதோ அந்த மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் ஜெட்ராடிங் இயந்திரங்களையும், ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களையும் பயன்பாட்டிற்கு வாங்குவதற்கு சிறப்பினமாகக் கருதி எடுத்துச் செய்திட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை தளர்த்தி அனுமதி அளித்து அரசு ஆணையிட்டது.

2) தற்போது, பார்வை 5ல் உள்ள நேர்முகக் கடிதத்தில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் நிர்வாக இயக்குநர், சென்னை மாநகரில் 14 ஜெட்ராடிங் இயந்திரங்களை வாங்குவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது என்றும், சில தொகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வரையறுக்கப்படாத நிதியில் போதுமான அளவு பணம் இல்லை என்றும், ஆனால் வரையறுக்கப்பட்ட நிதியில் பணம் உள்ளது என சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதாகவும் கூறியுள்ளார். மேலும், பார்வை 4ல் உள்ள அரசுக் கடிதத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வரையறுக்கப்பட்ட நிதியின்கீழ் மேற்கூறிய இயந்திரங்களை வாங்குவது குறித்து ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்றும், எனவே மேற்கண்ட ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து வாங்குவதற்கு ஏதுவாக, இதை வரையறுக்கப்பட்ட பணிகளுக்கான பட்டியலில் ஒன்றாக சேர்க்குமாறும், அதற்கான தெளிவுரை வழங்குமாறும் அரசிடம் கோரியுள்ளார்.

3) ஏற்கனவே பார்வை 3ல் உள்ள அரசுக் கடிதத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளில் வரையறுக்கப்பட்ட கட்டாய பணிகளுக்கான பட்டியலில் பாலப்பணிகள் சேர்க்கப்பட்டு ஊரகப் பகுதிகளில் வரிசை எண்.8லும் நகர்ப்புறப் பகுதிகளில் வரிசை எண்.10லும் சேர்க்கப்பட்டுள்ளது.

4) மேற்கண்ட சூழ்நிலையில் சென்னை பெருநகர் குடிநீழ் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய நிர்வாக இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி, பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் உள்ள சென்னை பெருநகரம் மற்றும் தமிழ்நாட்டில் எந்தெந்த மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தற்போது பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பாட்டில் உள்ளதோ அந்த மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் ஜெட்ராடிங் இயந்திரங்களையும், ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களையும் (Jetrodding and Hydraulically operated desilting machines) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் வரையறுக்கப்பட்ட நிதியில் வாங்குவதற்கு ஏதுவாக 2009-10ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.61, ஊரக வளர்ச்சி மற்றும்

ஊராட்சித் துறை, நாள் 16.07.2009ல் இணைப்பில் பத்தி 2ல் உள்ள வரையறுக்கப்பட்ட கட்டாய பணிகளின் வரிசையில் நகர்ப்புறப் பகுதிகளில் அடுத்த எண்ணாக அதாவது வரிசை எண்.11ல் சேர்த்து கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

ஆ) நகர்ப்புறப் பகுதிகளில்

11. ஜெட்ராடிங் இயந்திரங்களையும், ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களையும் வாங்குதல்

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை -9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
சட்டமன்ற பேரவை தலைவர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகம், சென்னை-9
தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
அனைத்து அமைச்சர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்கள், சென்னை-9.